திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில்

# நுண் பாசிகள் பற்றிய தேசிய களஞ்சியம் அமைக்க ரூ.84½ லட்சம் நிதி உதவி

## மத்திய அரசு வழங்கியது

திருச்சி, ஜூன்.10–
திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நுண் பாசிகள் பற்றிய தேசிய களஞ்சியம் அமைக்க மத்திய அரசு ரூ.84½ லட்சம் நிதி உதவி வழங்கி உள்ளது.

### தேசிய களஞ்சியம்

இந்திய அரசின் உயிரி தொழில்நுட்பத்துறை, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறை தலைவர் முனைவர் தாஜுதீனுக்கு நன்னீர்வாழ் நுண்பாசிகள் மற்றும் சயனோ பாக்டீரியாக்களுக்கான தேசிய களஞ்சியம் ஒன்றை நிறுவ ஒப்புதல் அளித்து உள்ளது. இதற்காக முதல் தவணையாக ரூ.84 லட்சத்து 65 ஆயிரத்தை வழங்கி உள்ளது. தேசிய அளவிலான இக்களஞ்சியமானது இத்துறை சார்ந்த அறிவியல் அறிஞர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

### ஆராய்ச்சிக்கு வழி வகுக்கும்

அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் மாதிரி வளரி சேகரிப்பு மையம், பிரான்ஸ் நாட்டின் பாஸ்டர் வளரி சேகரிப்பு மையம் ஆகியவற்றை போன்று இக்களஞ்சிய மையம் சிறப்பாக அமைய உள்ளது. நுண்பாசிகள் மற்றும் சயனோ பாக்டீரியாக்களின் உயிரின வளம், அவற்றின் வகைப்பட்டியலின் முக்கியத்துவம் ஆகியவற்றை மாணவர்களுக்கு உணர்த்தவும் அவர்களுக்கு இத்துறையில் ஆர்வத்தினை உண்டாக்கி அவர்களை இத்துறையில் சிறந்த அறிஞர்களாக உருவாக்கவும் இம்மையம் வழி வகுக்கும். சயனோ பாக்டீரியாக்கள் மற்றும் நுண் பாசிகளின் உயிரினவளம் மற்றும் அவற்றில் இருந்து கிடைக்கும் பயன்களை பற்றிய ஆராய்ச்சிகளை பேராசிரியர் தாஜுதீனும் அவரது ஆய்வு மாணவர்களும் கடந்த 25 ஆண்டுகளாக மேற்கொண்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தகவலை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.மா. முத்துக்குமார் தெரிவித்து உள்ளார்.